:: TANGEDCO ::

தலைமைபொறியாளர் அலுவலகம்

மதுரை மண்டலம்/ மதுரை-7

குஆ.எண்.தபொ/மது/உசெபொ(பாதுகாப்பு)/கோ.501/அ.எண்.97 /2020. நாள்: 09.09.2020

பொருள் : மின்சாரம் – மதுரை மண்டலம் – துணை மின் நிலையங்களில் பொதுவாக கண்டிப்புடன் பராமரிக்கப்படவேண்டிய பராமரிப்பு பணிகள் தொடர்பாக.

......

மதுரை மண்டல அலுவலகத்திலிருந்து பல்வேறு சுற்றறிக்கைகள் மூலமும், மதுரை மண்டல பாதுகாப்பு பொறியாளர் ஆய்வின் போதும், துணை மின் நிலையங்களில் பராமரிப்பு பணிகள், பணியாற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றி அறிவுருத்தப்பட்டிருந்தும், **பல்வேறு துணை மின் நிலையங்களில் பொதுவாக கடைப்பிடிக்கப்படவேண்டிய பராமரிப்பு பணிகள் கூட சரிவர கடைப்பிடிக்காமலிருப்பது கடுமையாக நோக்கவேண்டியுள்ளது. CMD அவர்களின் சமீபத்திய ஆய்வின் போது ஒரு துணை மின் நிலைய வளாகத்தில் Liquor Bottles மற்றும் தேவையற்ற பொருட்கள் இருப்பது சுட்டிக்காட்டப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

உற்பத்தியாகும் மின்சாரத்தினை தங்கு தடையில்லா தரமான அளவீடுகளுடன் பொதுமக்களுக்கு மின்சாரம் வழங்கவும், மின்சாதனங்களை சரியானவகையில் பராமரித்திடவும் உயிர்நாடியாம் அனைத்து துணை மின் நிலையங்களையும் மதுரை மண்டலத்தில் சரியான முறையில் பராமரித்திட அனைத்து பொறியாளர்களும், களப்பணியாளர்களும் உந்துதலுடன் சிறப்பான முறையில் பணியாற்றிட வேண்டும்.

மதுரை மண்டலத்தில் உள்ள பல்வேறு துணை மின்நிலையங்களை மதுரை மண்டல பாதுகாப்பு பொறியாளர் ஆய்வுசெய்த போது பொதுவான அடிப்படை குறைபாடுகளை கண்ணுற்றுள்ளார். பொதுவான கீழ்கண்ட குறைபாடுகளை அனைத்து துணைமின்நிலையங்களிலும் களைய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மேற்பார்வை பொறியாளர்களும், செயற்பொறியாளர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. முறைப்பணி இயக்குநர் பொறுப்பேற்றவுடன் Alarm check, DC leakage, Battery Pilot cell, போன்றவற்றினை சோதனை செய்து Log Book மற்றும் Daily reading Registerல் பதிவு செய்தல்.
2. **முறைப்பணி இயக்குநர் கண்டிப்பாக ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை மற்றும் தேவைப்படும் பொழுதும் முற்றத்தை சுற்றிப்பார்த்து (ட்ரான்ஸ்பார்மர் Humming noise observation, Arc sound, Glow etc) Log book ல் " முற்றம் சுற்றிப்பார்க்கப்பட்டது. Normal " என பதிவு செய்திடல் வேண்டும்.**
3. கட்டுப்பாட்டு அறையில் **முதலுதவி பெட்டி (First Aid Box)**யில் முதலுதவி மருந்துகள் வைக்கப்பட்டுள்ளனவா என்பதினை உறுதிபடுத்துதல்.
4. கட்டுப்பாட்டு அறையில் முறைப்பணி இயக்குநர் வசம் Approved operating instruction Manual இருத்தல் வேண்டும்.
5. துணை மின் நிலையத்திற்க்கு அருகில் உள்ள துணை மின் நிலையங்களில் இருந்து, பின்னோட்டத்திற்க்காக வரும் பீடர்களின் பெயர்கள் அவற்றின் Locations, DP structure names, Normally Open, Normally Closed, பின்னோட்டம் செய்யப்பட்டால் அந்த பீடரில் செல்லும் மின் திறன் அளவு போன்ற விபரங்கள் அந்தந்த கட்டுப்பாட்டு அறையிலும், அப்பகுதிகளுக்குட்பட்ட பிரிவு அலுவலகங்களுக்கும் தெரியும் வண்ணம் டிஸ்பிளே செய்திடல் வேண்டும். அதற்காக Contingency Plan தயார் செய்து கட்டுப்பாட்டு அறையில் வைத்திருத்தல் வேண்டும்.
6. அவசர காலங்களில் மின் நுகர்வோருக்கு மின்சாரத்தினை விரைவாக எவ்வாறு வழங்கிடல் வேண்டும் என அனைத்து பணியாளர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டு ஒத்திகை பார்த்தல்.

7. கட்டுப்பாட்டு அறையில் தேவையில்லாத தொங்கிக்கொண்டிருக்கும் வயரிங் அமைப்புக்கள், பேனல்களின் உள்புறம் மற்றும் வெளிப்புறம் சுத்தமாக வைத்திருத்தல், Key board மற்றும் LC boardகளில் முறையாக சாவிகளை வைத்திருத்தல்.
8. மின் கல அறையில் மின்விசிறி(Exhaust fan) சரியாக செயல்படவைத்தல்,
9. மின் கல அறையினுள் பேட்டரி ப்யூஸ் கேரியர்கள் சீல் செய்யப்படவேண்டும்.
10. பேட்டரிகளின் மூடிகளில் உள்ள துவாரங்கள், Electrolyte level, சரியாக பராமரித்தல்.
11. பேட்டரிகளுக்கிடையே தூசிகள், ஒட்டடைகள் இல்லாமலும், ஜாயின்ட்களில் சுத்தப்படுத்தி வாஸ்லின் போன்றவற்றினை தடவுதல்.
12. **வாரம் ஒருமுறை பேட்டரிகளில் பராமரிப்பு மேற்கொள்ளல்**.
13. பொதுவாக விதிகளின் படி பேட்டரிகளின் Specific gravity ஆனது மின் கலன் (Battery) Fully charged condition ல் 1195 at 15.6*C or 1183 at 32.2*C ஆக இருத்தல் வேண்டும். இவற்றில் Deviation of any cell from average ஆக 10 points அல்லது Variation in value for temperature rise 0.0007 for 1*C ஆக இருக்கலாம்.
14. **மின் கல பராமரிப்பு பணியினை உதவி மின் பொறியாளர் வாரம் தோறும், உதவி செயற்பொறியாளர் மாதந்தோறும், மூன்று மாதங்களுக்கொருமுறை செயற்பொறியாளர் அவர்களாலும் ஆய்வு செய்திடல் வேண்டும்**.
15. முற்றத்தில் போதுமான அளவு விளக்குகள் உள்ளனவா, அவற்றிற்கு எடுத்து செல்லப்படும் மின்சாரம் பாதுகாப்பன முறையில் சரியாக எடுத்து செல்லப்பட்டுள்ளனவா என்பதினையும் உறுதிப்படுத்துதல்..
16. முற்றத்தில் உள்ள மின் சாதனங்களின் உள்புறமும், வெளிப்புறமும் சுத்தமாக பராமரிக்கப்படுகின்றனவா அவற்றில் தேவையில்லாத கேபிள்கள் மற்றும் வயரிங் அமைப்புக்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதினையும் உறுதிப்படுத்துதல்.
17. **தீ அணைப்பு சாதனங்களை முறையாக பராமரித்து அவற்றை முறையான இடங்களில் வைத்தல்**.
18. துணை மின் நிலையத்தில் உள்ள அனைத்தும் AB Swithchகளும், முறையாக பூட்டப்பட்டுள்ளனவா அதற்குரிய சாவிகள் சரியான இடத்தில் வைக்கப்பட்டுள்ளனவா என்பதினை உறுதி செய்தல்.
19. **பேஸ் சீக்கொன்ஸ்** (Phase sequence-Red,Yellow,Blue) ஆகியவை ஒவ்வொரு மின் தொடர்களிலும் நிறமிட்டு காட்டிடல் வேண்டும்.
20. இரண்டாம் முறைப்பணியின் போது இரவு நேர Peak Hour ல் **முற்ற விளக்குகளை அணைத்து முற்றத்தில் “Glow” ஏதும் உள்ளதா என்பதினை உ**றுதிப்படுத்தி Log Book ல் பதிவு செய்தல்.
21. முற்றத்தில் Stock yard (Released CT, PT, Power Transformer etc., )போன்று பொருட்களை வைத்திருத்தல் கூடாது .
22. நில இணைப்பு கோல்களில் சரியான அளவில் வயரிங் அமைப்புக்களை தேர்ந்தெடுத்து பராமரித்தல்.
23. நில இணைப்பு தொட்டிகளுக்கு தண்ணீர் ஊற்றப்படுகிறதா என்பதினையும், உரிய காலங்களில் அவற்றின் வேல்யூக்கள் சோதனை செய்து அவற்றினை முற்றத்தில் டிஸ்பிளே செய்தல்.
24. முற்றத்தினையும் சுற்றுப்புறத்தினையும் தூய்மையாக பராமரித்திடுதல்.
25. மின் உபகரணங்களுக்கு பாதுகாப்பு கருதி ஸ்டேசன் ட்ரான்ஸ்பார்மரிலிருந்து கன்ட்ரோல் ரூமிற்கு செல்லும் மின்பாதை தனித்து இருத்தல்,
26. **பீடர் பிரேக்கர் கையினால் ட்ரிப் செய்யப்படும் போதும், இடையூரால் Fault tripping ஆகும் ஒவ்வொரு முறையும் (Including test charging trippings, while closing of DPs, etc.,) பதிவுகளாக Log book மற்றும் Tripping registerகளில் முறைப்பணி இயக்குநர் கண்டிப்பாக பதிவு செய்திடல் வேண்டும்**.

…3…

27. ஸ்டேசன் ட்ரான்ஸ்பார்மரிலிருந்து குடியிருப்பு வளாகங்களுக்கும், அலுவலகங்களுக்கும் செல்லும் மின் பாதையை சரிவர பராமரித்தல் அல்லது தனிமைப்படுத்தி தனியாக ஒரு பகிர்மான ட்ரான்ஸ்பார்மர் மூலம் மின்சாரம் கொடுத்தல்.
28. அருகருகே செல்லும் மின் பாதைகள், மின் உபகரணங்கள், இரட்டை மின்பாதைகள், Back feeding arrangement, AB switch ஆகியவற்றிற்கு அதன் பெயர்கள் மற்றும் எண்கள் தெளிவாக தெரியும் வண்ணம் நிற வேற்றுமைப்படுத்தி டிஸ்பிளே செய்திடல்.
29. பாதுகாப்பு ஸ்லோகன்கள், எச்சரிக்கை அறிவிப்புக்களை ஆங்காங்கே டிஸ்பிளே செய்திடல்.
30. துணை மின்நிலையத்தில் Equipment History விபரங்கள் கொண்ட பராமரிப்பு பதிவேடு, பாதுகாப்பு வகுப்பு பதிவேடு, பாதுகாப்பு தொடர்பான சுற்றறிக்கைகள் கொண்ட பதிவேடு, பேட்டரி பராமரிப்பு பதிவேடு, MRT மற்றும் Special Maintanance ஆகியோர் மேற்கொண்ட ஆய்வு பதிவேடுகள், ட்ரான்ஸ்பார்மர் ஆயில் பரிசோதனை பற்றிய பதிவேடுகள், மற்றும் அறிக்கைகள், TM ரெஜிஸ்டர் போன்றவை சரியாக பராமரிக்கப்படுகின்றனவா என்பதினை உறுதிப்படுத்துதல்.

எனவே மேற்கண்டவாறு முறையாக ஒவ்வொரு துணை மின் நிலையங்களிலும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதினையும், தினமும் ஒவ்வொரு முறைபணியின் போதும் பதிவேட்டில் பதிவு செய்யபடுகின்றதா என்பதினை உறுதிபடுத்துமாறு அனைத்து மேற்பார்வை பொறியாளர்களும், செயற்பொறியாளர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். **தவறும் பட்சத்தில் உதவி மின் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோர் மீது பொறுப்பு சுமத்தப்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.**

இக்குறிப்பாணை பெற்றுக்கொண்டமைக்கு அனைத்து உதவி செயற்பொறியாளர்களும், செயற்பொறியாளர்களும் மற்றும் மேற்பார்வை பொறியாளர்களும் ஒப்புகை அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒப்பம் (xxxx)பொ.பாஸ்கர் 09.09.2020

**தலைமை பொறியாளர்(பகிர்மானம்)**

**மதுரை மண்டலம்**

**பெறுநர்**

அனைத்து மேற்பார்வை பொறியாளர்கள்/மதுரை மண்டலம்

அனைத்து செயற்பொறியாளர்கள்/மதுரை மண்டலம் (மின்னஞ்சல் மூலமாக மட்டும்)

அனைத்து உதவி செயற்பொறியாளர்கள்/மதுரை மண்டலம் (மின்னஞ்சல் மூலமாக மட்டும்)

அனைத்து உதவி /இளமின்பொறியாளர்கள்/மதுரை மண்டலம் (மின்னஞ்சல் மூலமாக மட்டும்)

Copy submitted to Director (Distribution)/TANGEDCO / CHENNAI

அனைத்து அலுவலர்கள் / தலைமை பொறியாளர் அலுவலகம்/மதுரை. (மின்னஞ்சல் மூலமாக மட்டும்)